1975 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கேள்வி, பூண்டி நிறுவனத்தில் உள்ள ஆய்வுகள் பற்றியது. வறட்சிப் பணிகளின் கீழ் அந்த ஏரிகளில் சில் கிளியரன்ஸ் செய்யப்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, ஜி. ஏ. கணலில் வண்டல் படிந்து விடுவதன் காரணமாக ஆண்டு தோறும் பல லட்சம் ரூபாய்செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அந்த "ஹெட் ஸ்லூயிஸ்" அமைந்திருக்கிற இடத்தின் காரணமாகத்தான் வண்டல் படிகிறது என்று பொறியியல் வல்லுநர்கள் சொல்கிறார்கள். ஆகவே, அந்த "ஹெட் ஸ்லூஸிஸை" கொஞ்சம் முன்னால் அமைக்கும் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் கருதுவதைப்போல் "ஹெட்ஸ்லூயிஸை" மாற்றியமைக்கும் திட்டம் இல்லை. வண்டல் படியாமல் எப்படி நீரோடு அடித்துச் செல்லச் செய்யலாம் என்பது பற்றி ஆராய்ச்சி நடக்கிறது. ஆராய்ச்சி பற்றிய அறிக்கை வந்தபின்னால் மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று பரிசீலனை செய்யப்படும்.

Rajaji Memorial, Guindy.

* 586 *Q.*—THIRU N. DENNIS : }
THIRU N. K. PALANISAMY } : Will the Hon. the Minister for Public Works be pleased to state the progress of works so far made at the Rajaji Memorial in Guindy, Madras ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கிண்டி, ராஜாஜி நினைவாலயம் கட்டுவது தொடர்பான பணி முடிவடைந்து விட்டது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இதன் மொத்தச் செலவு எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா ? அதோடு இராஜாஜியின் நினைவு மண்டபத்தில் வேறு சில அரசியல் தலைவர்களின் படமும் பெயிண்ட் செய்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அப்படி யார் யாருடைய படங்கள் தேசியத் தலைவர்கள் என்ற முறையில் அங்கே இடம் பெற்றிருக்கின்றன என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இதற்காக அரசு 6 லட்சம் ரூபாய் சாங்ஷன் செய்தது. உள்ளே எந்தெந்த படங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன என்று கேட்டார்கள். மூதறிஞர் இராஜாஜி அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் என்ற முறையில் கூட அல்ல ; அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட முக்கியமான சம்பவங்களைத் குறிக்கும் படங்களை வைத்திருக்கிறோம். தனிப்பட்ட யாருடைய படமும் அல்ல.

திரு. என். கே. பழனிசாமி : சார், மெயின்டனென்ஸ் செய்வதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறத்து ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பொதுப்பணித் துறை அதை ஏற்றுக்கொள்ளும்.

திரு. கு. அ. பொம்மன்: தலைவரவர்களே, இராஜாஜி அவர்களுடைய நினைவு மண்டபத்திற்கு திறப்பதற்கு நம்முடைய இராஷ்டிரபதி அவர்கள் வருவதாக இருந்தது. அவர்கள் இப்போது வர முடியாததால் திறப்புவிழா தள்ளிபோடப்பட்டிருக்கிறது. இராஷ்டிரபதி வராததால் அண்மையில் ஜெ. பி. நாராயணன் அவர்கள் சென்னைக்கு வர இருக்கிறார்கள்; அவரைக்கொண்டு திறக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ சண்முகம்: தலைவரவர்களே, ஜனாதிபதி வந்து திறப்பதாக இருந்தது. ஆனால் அவர்கள் இப்போது வருவதற்கில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். வேறு யாரைக் கொண்டு திறப்பது என்று அரசு இன்னும் முடிவு செய்யவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த இராஜாஜியினுடைய நினைவு மண்டபம் காந்தியடிகளுடைய நினைவு மண்டபத்தை ஒட்டி இருக்கிறது. அம்மாதிரி அந்த இடத்தில் நினைவு மண்டபம் கட்டுவதற்கு ஏதாவது விசேஷ காரணங்கள் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: காந்தியடிகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர் என்பதற்காக மட்டுமல்ல, காந்தியடிகளின் சம்மந்தியாக இருந்தார் என்பது மட்டுமல்ல, இரு தேசியத் தலைவர்களின் நினைவு மண்டபங்களும் பக்கத்தில் பக்கத்தில் இருப்பதில் தவறு இல்லை என்பதால் அங்கு அமைக்கப்பட்டது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, the Government has purchased the house in which Rajaji was born in Hosur Taluk two years back. May I know from the Hon. Minister for Public Works what steps have been taken to make it a memorial and a centre of pilgrimage ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அதுபற்றி தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட பெரும் தலைவர்களுக்கு நினைவு மண்டபம் அமைக்கும்போது டில்லியில்கூட வரிசையாக காந்தியடிகள், நேரு, சாஸ்திரி என்று அமைத்திருக்கிறார்கள். அதேமாதிரி இங்கும் எங்கள் ஒப்பற்ற தலைவர் காயிதே மில்லத் அவர்களுக்கு ஒரு நினைவு மண்டபம் அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இதுபற்றி இதுவரை எந்தவிதமான கோரிக்கையும் வரவில்லை ; இது நியாயமான ஒன்று என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

1975 ஏப்ரல் 8]

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இராஜாஜி நினைவு மண்டபம் கட்டி முடிந்துவிட்டது. திறப்பு விழாவுக்கு குடியரசுத் தலைவர் வருவதாக இருந்தது ; இப்போது வர முடியவில்லை என்று தெரிவிததிருக்கிறார்கள். வருவதாக தேதி கொடுத்துவிட்டு வராமல் இருப்பதற்கு ஏதாவது அரசியல் காரணம் உண்டா ? அப்படி ஏதாவது . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு விடை இல்லை. வினா 587.

Mettupalayam–Ooty railway service.

*587 Q.—THIRU R. R. MUNUSAMI
THIRU N. KITTAPPA } : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the State Government have taken any efforts to secure the restoration of the railway service between Mettupalayam and Ooty ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :

(அ) ஆம்.

(இ) ஊட்டி — மேட்டுப்பாளையத்திற்கிடையே செல்லும் 35/36 எண்கள் கொண்ட ரயில் வண்டிகள் 15—7—1974 லிருந்து மீண்டும் விடப்படுகின்றன என்று தென்னிந்திய ரெயில்வே பொது மேலாளர் தெரிவித்துள்ளார்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த உதகை—மேட்டுப்பாளையம் இரயில் பாதையை அடிக்கடி நிறுத்திவிடுகிறார்கள். உதகமண்டலம் ஒரு முக்கியமான சுற்றுலா கேந்திரத்திற்குட்பட்டிருப்பதால், தமிழக அரசே அந்த ரயில் பாதையை ஏற்று நடத்த, மத்திய அரசிடம் கோரி பெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நிலக்கரி பற்றுக்குறை காரணமாக தமிழ்நாட்டில் மட்டுமல்ல, நாடு பூரா விலும் நிறுத்தப்பட்ட இரயில் பாதைகளில் இதுவும் ஒன்று. நம்முடைய வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் இரயில் விடப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்வதுபற்றிய குறிப்பு எதுவும் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே, மேட்டுப்பாளையத்திலிருந்து உதகைக்குச் செல்ல கரி எஞ்சின் போட்டிருப்பதால் மிகவும் மெதுவாக செல்லுகிறது. அது பிரயாணிகளுக்கு கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் டீசல் எஞ்சின் போட மத்திய அரசுக்கு நம்முடைய அரசு சிபாரிசு செய்யுமா ?